CC.NO. 43/2020 PW-3

நாள் : 22.02.2024

பெயர் : மகேஸ்வரி

க/பெ : லோகநாதன்

**(எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 4 வது ஆஜரில் இல்லை. எதிரிகள் 2 மற்றும் 4 சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி 3 இறந்து விட்டார்.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் மகள் புவனேஸ்வரிக்கும் எதிரி ஜெயகணேஷ்-க்கும் 2017 ம் ஆண்டு திருமணம் நடைப்பெற்றது என்றால் ஆமாம். திருமணத்திற்கு பிறகு உங்களது மகள் எதிரி ஜெயகணேஷ் ஆற்காட்டில் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். உங்களது மகள் எதிரியுடன் இரண்டு மாதம் சேர்ந்து வாழ்ந்தார்களா என்றால் இல்லை. 1 மாதம் தான் வாழ்ந்தார்கள். அதற்குள் கொடுமைகள் செய்யபட்டது. 2017 லிருந்து 2019 ஜுலை வரையிலான காலகட்டத்தில் எதிரி உங்கள் மகளை கொடுமைப்படுத்தப்பட்டதாக சொல்லும் நீங்கள் காவல் நிலையத்தில் புகாரோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்போ கொடுத்தீர்களா என்றால் இல்லை 2019 ல் தான் கொடுத்தோம். உங்களை போலீசார் விசாரணையிலோ எந்த மாதம் எந்த தேதியில் உங்கள் மகள் உங்கள் வீட்டிற்கு வந்தாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

எந்த தேதியில் எந்த மாதத்தில் உங்கள் மகளின் மாமியாரா உஷா உங்கள் மகளை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. போலீசார் விசாராயின் போது உங்கள் மகளுக்கு 5 1/2 சவரன் தான் உங்களால் போட முடியும் என்றும் அதற்கு உங்கள் சம்மந்தி பெண் கொடுத்தால் போதும் என்று சொன்னார்கள் என்று கூறியுள்ளார்கள் என்றால் ஆமாம். ஆய்வாளர் உங்களை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஊரில் வைத்து விசாரித்தார்கள். உங்களிடம் எங்கு வைத்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் ஊரில் 1 முறையும் காவல் நிலையத்தில் 1 முறை வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாராணையில் மேற்சொன்ன விவரத்தை கூறியுள்ளீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் சொன்ன விவரத்தை போலீசார் கைப்பட எழுதிக்கொண்டார்களா என்றால் ஆமாம். வழக்கின் ஆய்வாளர் சுப்புலட்சுமி என்பவர் எதிரியின் அப்பாவான இறந்து போன பழனி மற்றும் எதிரியின் தாயார் உஷாவை காவல் நிலையத்தில் வைத்து அடித்தாக ஆய்வாளர் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். உங்கள் ஆஜர் எதிரியிடம் ஆய்வாளர் பணம் கேட்டு இருந்தார் அதை கொடுக்காத காரணத்தினால் எதிரி குடும்பத்தினரும் ஆய்வாளர் அடித்ததால் அவர் மீது வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கில் இருந்து அவரை காப்பற்றுவதற்காக நீங்கள் இப்போது பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்

சரியல்ல.

ஆஜர் எதிரி மற்றும் அவருடைய அம்மா உஷா எந்த கொடுமையும் செய்யவில்லை. உங்கள் மகள் தான் மணம் ஒத்துபோகாமல் ஆஜர் எதிரியான அவர் கணவரிடமிருந்து விவாகரத்து கூறினார். அதை எதிரி மறுத்ததனால் எதிரியின் மீது வரதட்சனை கொடுமை புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அது தவறு. அவர்கள் கொடுமை செய்தார்கள். நீங்கள் சொல்வது போல் கொடுமைகள் செய்து இருந்தால் 2017 லேயே புகார் கொடுத்திருப்பிர்கள். 2019 ல் கொடுத்திருக்கமாட்டிர்கள் என்றால் அது சரியல்ல. உங்கள் மகள் தான் ஆஜர் எதிரியிடம் இருந்து விவகாரத்து கூறி இராணிப்பேட்டை சார்ப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருக்கிறார்கள் என்று சொன்னால் ஆமாம். நீங்கள் சொல்வது போல் எதிரி எந்த கொடுமையும் செய்யவில்லை வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.2019 ஜுலை மாதம் உங்கள் மகள் கொடுத்த புகாரில் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று 2019 நவம்பர் மாதத்தில் எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சாட்சியம் அளிப்பது தவறு. ஜுலை மாதம் கொடுக்கப்பட்ட புகார் முடிவுற்றது என்று சொன்னால் சரியல்ல.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

S/d.***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.